1981 ஜனவரி 30]

கருத்து இருக்கின்றது. நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்துருவும் இருக்கின்றது. அதற்குப் பின்னால் வேறேதேனும் முயற்சிகள் எடுக்கப்படுமேயானால் அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம்.

*வினா எண் 107—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம். இப்பொருள் குறித்து அரசுக்கு தகுந்த பரிந்துரைகளைச் செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட உடன் மேல் நடவடிக்கைகள் தொடரும்.

செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண் 108.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கல்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்துத் தேறியமாணவர்களைப் பட்ட மேற்படிப்பிற்குச் சேர்க்க மறுக்கப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உண்மையில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, கடந்த ஆண்டு செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்த மாணவர்களை பி.காம். பட்டப் படிப்புக்கும் மற்ற பட்டப் படிப்புகளுக்கும் சேர்க்க முடியாது என்று கல்லூரியின் முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மிகுந்த சிரமப்பட்டு ஒருசிலரைச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டாவது பி.யு.சி.யில் தேறிய மாணர்வர்களுக்கும் பட்டப் படிப்பிலே குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே இந்த ஆண்டு 68 மாணவர்கள் பி.யு.சி. வகுப்பிலே படித்தவர்கள் பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தான் என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சில மாணவர்களைச் சேர்த்திருப்பதாகச் சொல்லி விட்டார்கள், பிறகு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்?